**செ. கு. எண்:129** **நாள்: 08.09.2017**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – **8.9.2017**</u>

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் வட்டம், திருவாவடுதுறை கிராமம் செக்கடித் தெருவைச் சேர்ந்த திரு. வெங்கட்ராமன், அவருடைய மனைவி திருமதி கார்த்திகா மற்றும் அவரது மகள் செல்வி சாகித்யா ஆகிய மூன்று பேரும் **6.9.2017** அன்று வீட்டு சுவர் இடிந்து விழுந்து, சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. வெங்கட்ராமன் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் திரு. வெங்கட்ராமன் அவர்களின் இரண்டாவது மகள் செல்வி தர்ஷினி பலத்த காயமடைந்துள்ளார் என்ற செய்தியை அறிந்து வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் செல்வி தர்ஷினிக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க மாவட்ட நிருவாகத்திற்கு உத்தரவிட்டுள்ளேன்.

பெற்றோரை இழந்து வாடும் செல்வி தர்ஷினியின் எதிர்கால நலன் கருதி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 5 லட்சம் வழங்கவும், இந்த தொகையை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக வைக்க உத்தரவிட்டுள்ளேன். இந்த வைப்பு நிதியிலிருந்து கிடைக்கும் வட்டி தொகை மாதந்தோறும் செல்வி தர்ஷினியின் பராமரிப்பு செலவிற்காக கிடைக்கப்பெறும்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**